**தமிழ்நாடு அரசு கேபிள் டி.வி. கார்ப்பரேஷன் லிமிடெட்**
34 (123). 6வது தளம், துகார் டவர்ஸ், மார்ஷல்ஸ் ரோடு, எழும்பூர், சென்னை 600 008
தொலைபேசி எண். 044–28432911, தொலைநகல். 044–28432913

TACTV

## உள்ளூர் கேபிள் ஆப்பரேட்டர்கள் (LCO) மற்றும் தனியார் உள்ளூர் தொலைக்காட்சிஉரிமையாளர்கள் (PLC) மாதக்கட்டணத்தினை **பிரதிமாதம் 20ம் தேதிக்குள் செலுத்துவது** குறித்த அறிவிப்பு

**பார்வை: 20.05.2014 அன்று நடைபெற்ற 38–வது இயக்குநர் குழு கூட்டத்தின் 8–வது தீர்மானம்.**

குறைந்த கட்டணத்தில் நிறைவான கேபிள் டிவி சேவையை பொதுமக்களுக்கு வழங்கும் உயரிய நோக்கத்துடன் தமிழகம் முழுவதும் கேபிள் டிவி சேவையினை மாதம் ரூ.70/– என்ற கட்டணத்தில் தமிழ்நாடு அரசு கேபிள் டிவி நிறுவனம் வழங்கும் என மாண்புமிகு தமிழ்நாடு முதலமைச்சர் அவர்கள் அறிவித்தார்கள். அதன்படி, தமிழ்நாடு அரசு கேபிள் டிவி நிறுவனம், கேபிள் டிவி சேவையை அளித்து வருகிறது.

தற்பொழுது, உள்ளூர் கேபிள் ஆப்பரேட்டர்கள் (LCO) மற்றும் தனியார் உள்ளூர் தொலைக்காட்சி உரிமையாளர்கள் (PLC) தங்களுடைய மாதாந்திர கட்டணத்தொகையினை, அடுத்த மாதத்தின் 20ம் தேதிக்குள் தமிழ்நாடு அரசு கேபிள் டிவி நிறுவனத்திற்கு செலுத்த வேண்டும் என தமிழ்நாடு அரசு கேபிள் டிவி நிறுவனத்தின் இயக்குநர் குழு முடிவு செய்துள்ளது.

எனவே, தமிழ்நாடு அரசு கேபிள் டிவி நிறுவனத்தில் பதிவு செய்துள்ள உள்ளூர் கேபிள் ஆப்பரேட்டர்கள் (LCO) மற்றும் தனியார் உள்ளூர் தொலைக்காட்சி உரிமையாளர்கள் (PLC) அந்தந்த மாதத்திற்குரிய கட்டணத்தொகையினை அடுத்த மாதத்தின் 20–ம் தேதிக்குள் தமிழ்நாடு அரசு கேபிள் டிவி நிறுவனத்திற்கு செலுத்துமாறு அறிவுறுத்தப்படுகிறார்கள். அதாவது 2014–ம் ஆண்டு மே மாதத்திற்கான கட்டணத்தொகையினை 20.06.2014–க்குள் செலுத்த வேண்டும். தவறும் பட்சத்தில், 21–ம் தேதி முதல் அந்தந்த மாதத்திற்கான நிலுவைத்தொகையின் பேரில் மாதம் ஒன்றிற்கு ஒரு சதவீதம் (1%) என்ற அடிப்படையில் நிலுவையிலுள்ள நாட்களுக்கு கணக்கிட்டு அபராதத்தொகை வசூல் செய்யப்படும்.

எனவே, அவரவர் செலுத்த வேண்டிய மாதாந்திர கட்டணத் தொகையினை மேலே குறிப்பிட்டுள்ள கால வரையறைக்குள் தவறாது செலுத்துமாறு கேட்டுக் கொள்ளப்படுகிறார்கள்.

**மேலாண்மை இயக்குநர்**

செ.ம.தொ.இ/ /வரைகலை/2014

Size : 16 x 25cm